
# காலிஸ்தான் விடுதலைப் போராட்டமும் புலம்பெயர் தேசியவாதமும்: சீக்கிய விடுதலைப் போராட்டத்தினை மையப்படுத்திய ஆய்வு

உ. தினுஜா, கே. ரீ. கணேசலிங்கம்
*அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.*
u.thinuja@gmail.com

**அறிமுகம்**

சீக்கியரின் விடுதலைப் போராட்டம் காலிஸ்தான் தனியரசிற்கான தாயகநிலத்தினை மையப்படுத்தியதாகும். இந்தியாவின் பஞ்சாப் மாநிலமே அதன் மையநிலமாக அமைந்தது. பஞ்சாபின் புவிசார் அமைவிடமானது வடக்கே ஜம்மு காஷ்மீர், கிழக்கில் ஹிமாச்சல் மற்றும் ஹரியானா, மேற்கில் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் என்பவற்றை எல்லைகளாக கொண்டு காணப்படுகின்றது. இந்திய நிலப்பரப்பிலேயே வளமான பகுதியாக அமைந்துள்ள பஞ்சாப் மாநிலம் சிந்து சமவெளியினையும் அதன் பிரதான ஐந்து நதிகள் மூலமான நீர்வளம் மற்றும் நெற்செய்கையினால் இந்தியாவின் "கோதுமைக் கிடங்கு" என அழைக்கப்படுகின்றது. சீக்கியர்களின் அடையாளம் அவர்களின் மதமும் மொழியாமாகும். சீக்கியமதம் இந்து மற்றும் இஸ்லாமிய மத அம்சங்களின் கூறுகளின் பின்னணியில் கிறிஸ்துவுக்கு பின் 15ஆம் நூற்றாண்டில் தோன்றியதாக வரலாற்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சீக்கியர்களுடைய பண்பாட்டு அம்சங்கள் மதத்தோடு கட்டுண்டு காணப்படுகின்றது.




படம் 1: பஞ்சாப்பின் வரைபடம். ஆதாரம்: Google Map

அண்மைக்கால மதிப்பீடுகளின் படி உலகில் 27.77 மில்லியனிற்கு அதிகமான சீக்கியர்கள் வாழ்கின்றனர். குறிப்பாக 16மில்லியனுக்கு அதிகமான சீக்கியர் பஞ்சாப் மாநிலத்தில் வாழ்கின்றனர். ஏனையோர் புலம்பெயர் தளத்தில் வாழ்கின்றனர். குறிப்பாக பிரித்தானியர்களினுடைய காலனித்துவம்,

1947ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்திய-பாகிஸ்தான் பிரிவினை, 1980-1990களில் காலிஸ்தான் கோரிக்கைக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் மற்றும் இந்திராகாந்தியின் படுகொலைக்கு பின்னரான சீக்கியர் மீதான தாக்குதல்கள் அவர்களை புலம்பெயரத் தூண்டிய காலப்பகுதிகளாக காணப்படுகின்றன. அதுமட்டுமல்லாது பொருளாதார நெருக்கடிகள் மற்றும் பாகிஸ்தானில் காணப்படும் பயங்கரவாத நடவடிக்கைகள் போன்ற அம்சங்கள் சீக்கியர்களை எல்லை தாண்டிய தொடர் புலம்பெயர்தலுக்கு உட்படுத்தியது. இதனூடாக புலம்பெயர் தேசியவாதம் சீக்கியரால் கட்டமைக்கப்பட்டது. புலம்பெயர் தேசியவாதம் பற்றி அன்டர்சன் (Benedict Anderson-1936-2015) குறிப்பிடும் போது தூரத்தேசியம் என்ற வார்த்தைப் பிரயோகத்தை முதன்மைப்படுத்தினார். ஒருமக்கள் கூட்டத்தின் தகவல் தொழில்நுட்பம், இணையத் தொடர்பாடல்கள் என்பனவற்றின் மூலமே தேசிய பிரக்ஞை கட்டமைக்கப்படுகின்றது என்கிறார். ஒரு தேசத்தின் பகுதியாக தம்மைக் காணும் தனிமனிதர்களது மனோநிலை கற்பிதமானது, இது இல்லாததொன்றை கற்பனை செய்வதல்ல. மாறாக வரலாற்று ரீதியாக மொழி, கலாசாரம், இயற்கைநிலம் என்பவற்றாலும் பொருளியல் அரசியல் அதிகாரம் போன்ற காரணிகளாலும் அதன் தாக்கத்தாலும் தேசம் என்ற உணர்வு தோன்றுகிறது. இது காலம் தோறும் மாறிக் கொண்டே இருக்கிறது என அவர் விபரிக்கின்றார். அது மட்டுமன்றி தேசியம் பற்றிய கருத்தியலில் ஆண்டர்ஸன் தூரதேசியம் (Distant Nationalism) பற்றி விரிவாக உரையாடுகின்றார். புலம்பெயர் தேசியவாதம் என்பது தமது சொந்த தாயகத்திலிருந்து பல்வேறு காரணங்களுக்காக வெளியேறி வாழும் சமூகங்கள் தமது இன, மத, மொழி அடையாளத்தை பாதுகாக்கவும் தாயக அரசியல் பிரச்சினைகளில் தலையீடு செய்யவும், சுயாட்சி அல்லது தனிநாட்டுக் கோரிக்கையினை இலக்காக கொண்டு புலம்பெயர் நாடுகளில் இருந்து முன்னெடுக்கப்படும் அரசியல் சமூக இயக்கமாகக் காணப்படுகிறது. ஆன்டர்சன் குறிப்பிடும் தூரதேசியமும் புலம்பெயர் தேசியமும் ஒரே இலக்கைக் கொண்டதாகவே காணப்படுகிறது.

புலம்பெயர் சமூக சீக்கியர்களினதும், இந்தியா வாழ் சீக்கியர்களினதும் பிரதான நோக்கம் காலிஸ்தான் அரசின் உருவாக்கமாகும். சீக்கிய மக்கள் தமக்கான நிலத்தில் சுயாட்சி கோரி மேற்கொண்ட போராட்டமே காலிஸ்தான் விடுதலைப் போராட்டமாகும். 1947 ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்ட போது சீக்கியர்களினுடைய குரு பரம்பரையின் பிறந்த இடம் உட்பட பல புனிததலங்கள் பாகிஸ்தானின் இறைமைக்குள் உள்வாங்கப்பட்டது. இதன் பின்னணியில் இந்து-முஸ்லிம்-சீக்கிய மத வன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்டன. இதன் போது 1947-ல் பஞ்சாபிசுபா இயக்கம் பஞ்சாபிய மொழி பேசும் தன்னாட்சி சீக்கிய அரசை நிறுவ அழைப்பு விடுத்ததே தனியரசு உருவாக்கத்திற்கான அடித்தளமாகும். 1966ல் மொழி அடிப்படையில் பஞ்சாப் மொழி பேசுபவர்கள் பஞ்சாப் மாநிலமாகவும் ஹிந்தி மொழி பேசுபவர்கள் ஹரியானா மாநிலமாகவும் எல்லைப்படுத்தப்பட்டு பஞ்சாப்பின் தலைநகர் மற்றும் நீர் வளத்தை இரு மாநிலத்திற்கும் பொதுவுடமையாக மாற்றியமை சீக்கியர்களிடையே தம் அடையாளம் அழிக்கப்படுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியது. இதனால் அகாலிதளம் (Akali Dal) எனப்பட்ட பஞ்சாபிய அரசியல் கட்சி அனந்த்பூர் சாஹிப் தீர்மானம் என்ற பெயரில் பாதுகாப்பு, வெளிவிவகாரம், நாணயம் போன்ற அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய எல்லா அதிகாரங்களும் உடைய சுயாட்சினையும், சண்டீகர் தலைநகர் மற்றும் வளங்களை பஞ்சாப் மாநிலத்திற்கு மட்டும் உரித்தாக்கி சீக்கிய அடையாளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றவாறு கோரிக்கைகளை முன்வைத்தது. இதனால் பஞ்சாப்பில் அகாலிதள அரசியல் கட்சியின் செல்வாக்கு அதிகரித்து காங்கிரஸ் கட்சிக்கான ஆதரவு குறைவடைந்தது. எனவே காங்கிரஸ் கட்சி ஜர்னெயில் சிங்

பிந்டரன்வாலே (Jarnail Singh Bhindranwale 1947-1984) என்ற மதத் தலைவரின் அமைப்பிற்கு ஆதரவு வழங்கி அகாலிதளக் கட்சியை பலவீனமடையச் செய்தது. இந்நிலையில் தன் இனத்திற்கு ஆதரவாகவும் மத்தியரசிற்கு எதிராகவும் ஜர்னெயில் சிங் பிந்டரன்வாலே தன் அமைப்பினரைக் கொண்டு ஆயுதமேந்திய போராட்டத்தின் மூலம் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தனர். இதுவே காலிஸ்தான் விடுதலைப் போராட்டமாக மாற்றமடைந்தது. இவ்வாயுதப் போராட்டத்தினை அடக்க இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி (Indira Gandhi 1917-1984) இராணுவத்திற்கு கட்டளை பிறப்பித்தார். இதன்போது சீக்கியர்களின் புனிதத் தலமான அமிர்தரஸில் அமைந்துள்ள பொற்கோவிலில் பிந்டரன்வாலேயும் அவரது ஆதரவாளர்களும் தஞ்சம் அடைந்தனர். இராணுவம் கோயிலுக்குள் புகுந்து போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டது. இதுவே Operation Blue Star என்ற பெயரில் இந்திய இராணுவத்தின் தாக்குதலாக அமைந்திருந்தது. இதற்கு எதிர்வினையாற்றிய சீக்கியர்களும் இந்திராகாந்தியின் மெய்க்காவலர் மூலமாக அவரைப் படுகொலை செய்தனர். இது காலிஸ்தான் தனிநாட்டுக் கோரிக்கைக்கான விடுதலைப் போராட்டம் உச்சம் பெற்ற காலப்பகுதியாகும். இதன் பின்னணியில் சீக்கியர்கள் மீது அடக்குமுறைகளும், மனிதஉரிமை மீறல்களும் பிரிவினைவாதிகள் என்ற குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு காலிஸ்தான் விடுதலைப் போராட்டம் அழிக்கப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு காலிஸ்தான் தனியரசை கட்டியமைப்பது என்பது இன்று சவால்மிக்கதாக காணப்படுகிறது.

**ஆய்வுப்பின்னணி**

காலிஸ்தான் எனப்படும் தனியான சீக்கிய அரசொன்றினை கட்டியெழுப்புவதில் பல்வேறு சவால்களைப் புலம்பெயர் தளத்திலும் உள்ளகத் தளத்திலும், சீக்கியர்கள் எதிர்கொள்கின்றனர். தென்னாசியப் பிராந்திய வல்லரசாகவும் சர்வதேச உறவுகளில் பலமான இருப்பினை கொண்டதும் அபிவிருத்திப் பாதையில் வளர்ச்சி அடைந்து கொண்டு செல்லும் இந்தியா அதன் அரசியலமைப்பின் ஊடாக சிறுபான்மை இனக் குழுக்களின் சுயாட்சி அதிகாரத்தை ஏற்காத அரைகுறை சமஸ்டியினைக் கொண்ட அரசாகும். இந்தியரசு மதச்சார்பற்ற அரசாகக் குறிப்பிட்டாலும் நடைமுறையில் இந்துத்துவப் பெரும்பான்மையினையும், பன்மைத்துவ சமூகக்கட்டமைப்பினையும் கொண்டதாக விளங்குகின்றது. இத்தகைய பலமான அரசில் ஏறக்குறைய இந்திய சனத்தொகையில் இரண்டு சதவீதமான சீக்கியர்களின் தனிநாட்டுக் கோரிக்கை இந்தியாவின் அதிகார அரசியலுக்குள் சாத்தியமாகுமா என்ற கேள்வி பிரதானமானதாகும்.

தேசியம் என்பது நிலம் மற்றும் மக்களால் கட்டமைக்கப்படுவதாகும். 1947 மற்றும் 1966 இல் ஏற்பட்ட பிரிவினையால் குறிப்பிடத்தக்க நிலப்பகுதியை சீக்கியர் இழந்தனர். இந்தியாவில் சீக்கியர்கள் பஞ்சாப்பில் 58சதவீதத்திலும் ராஜஸ்தான் (870,000), ஹரியானா (1.2million) போன்ற மாநிலங்களிலும் பரவலடைந்து காணப்படுகின்றனர். இதில் குறிப்பாக பஞ்சாப் மாநிலத்தில் 38%ற்கு அதிகமாக இந்துக்கள் வாழ்கின்றனர். இவர்கள் தம் தாய் மொழியாக ஹிந்தி மொழியைக் கருதுகின்றனர். இந்தியாவின் வடமாநிலங்களில் ஹிந்தி மொழியைத் தேசிய மொழியாக நடைமுறைப்படுத்தும் அரசியல் போக்கு சீக்கிய மொழியின் இருப்பினை வலுவிழக்கச் செய்கிறது. இந்நிலையில் மக்கள் தொகையுடன் கூடிய அரசை நிர்மாணிப்பதில் நெருக்கடியை ஏற்படுத்துகிறது.

பஞ்சாப் மாநிலம் நிலத்தால் சூழப்பட்ட பகுதியாகையால் ஏதேனும் ஒருவகையில் இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் தங்கியிருக்க வேண்டிய நிலையில் உள்ளது. குறிப்பாக, பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதி, சந்தைகளுக்கான அணுகல், சீக்கியரின் வாழ்வாதாரம் என்பன ஏனைய மாநிலங்களோடு இணைந்து காணப்படுவதும் காலிஸ்தான் உருவாக்கத்தினைக் கேள்விக்கு உட்படுத்துகிறது. இத்தகைய காரணங்களினால் பஞ்சாப் வாழ் சீக்கியர்களில் குறிப்பிட்ட பகுதியினர் தனிநாட்டுக் கோரிக்கையினை அன்றி இந்தியாவின் சமஸ்டியை வலுவடையச் செய்து அதற்குள் தமக்கான சுயாட்சியை விரும்புகின்றவர்களாகக் காணப்படுகின்றனர். இதன்போதே சீக்கியர்களின் பொருளாதார சமூக முன்னேற்றம் சாத்தியப்படுமென கருதுகின்றனர். இவ்வாறு உள்ளக ரீதியில் காலிஸ்தான் விடுதலைப் போராட்டம் நலிவடைகின்றது.

சீக்கியர்கள் சர்வதேச ரீதியில் பரவலடைந்து காணப்பட்டாலும், அவர்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கான போராட்டத்தை எந்த அரசும் அங்கீகரிக்காத நிலை உள்ளது. ஓர் அரசினை சர்வதேச அரசுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலை ஒரு பொதுவான யதார்த்தமாக உள்ளது. அதற்கான நகர்வுகளினை சீக்கிய புலம்பெயர் தேசியவாத அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும். புலம்பெயர் தளத்தில் தமது இருப்பு, வகிபங்கு, இராஜதந்திர நகர்வுகள், அரசியல் பொருளாதார பங்காளிகளாக தம்மைக் கட்டமைத்தல் போன்றனவே காலிஸ்தான் விடுதலைப் போராட்டத்திற்கான சாத்தியப்பாட்டினை ஏற்படுத்தும். இத்தகைய பிரச்சினைகளினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் கருதுகோள்**

புலம்பெயர் தேசியவாதத்தின் அடிப்படையில் சீக்கியரின் காலிஸ்தான் விடுதலைப் போராட்டம் சாத்தியப்பாடு.

**ஆய்வுமுறையியல்**

இவ்வாய்வில் விமர்சன யதார்த்த முறையியல்(Critical Realist Theory) பிரயோகிக்கப்படுகிறது. விமர்சன யதார்த்தம் என்பது சமூக நிகழ்வுகளை புறத்தோற்றங்களின் அடிப்படையில் மட்டுமல்லாமல் அதன் அடுக்குகளில் உள்ள ஆழமான காரணிகள், சமூகக் கட்டமைப்புகள், சமூக செயல்முறைகள் மற்றும் அதிகார ரீதியிலான உறவுகளை ஆராய்வதாக அமைகிறது. அந்தவகையில் சீக்கிய விடுதலைப் போராட்டத்தில் புலம்பெயர் சீக்கியர்களுடைய பங்களிப்புகள், யதார்த்த ரீதியாக புலம்பெயர் தேசியவாதம் காலிஸ்தான் விடுதலைப் போராட்டத்தினை வெற்றியடைய செய்வதற்கான வாய்ப்புகள் என்பன பற்றிய விமர்சனக் கண்ணோட்டத்தினையும், இந்திய அரசின் அதிகாரத்துவ செயல்பாடுகளினாலும், வெளியுறவுக் கொள்கைகளின் ஊடாகவும் சீக்கியர்களுடைய போராட்டத்தை கையாளும் விதத்தினையும் ஆராய்வதாக இம் முறையியல் காணப்படுகிறது. அத்தோடு வரலாற்று விபரண ஆய்வு முறையியலும் இவ்வாய்வில் தேவை கருதிப் பயன்படுத்தப்படவுள்ளது. வரலாற்று விபரண ஆய்வு முறையியலானது கடந்தகால நிகழ்வுகளை ஆதாரபூர்வமாக இனங்கண்டு அதன் உண்மைகளை ஆராய்வதாகும். ஒரு நிகழ்வு ஏன் நடந்தது அதனால் ஏற்பட்ட மாற்றங்கள், அதன் பின்னணியில் தற்போது காணப்படும் பிரச்சினைகள் என்பதை விளக்குவதாகவும் அமையும். இதற்கமைய சீக்கியர்கள் தனியரசைக் கோருவதற்கான வரலாற்று ரீதியான காரணங்கள் அவர்கள் மேற்கொண்ட போராட்டங்கள் சீக்கியரின் தற்போதைய நிலைப்பாட்டினை வரலாற்றுத் தரவுகளின் மூலமாக விவரிப்பதற்கு இவ்வாய்வு முறையியல் பயன்படுத்தப்படுகிறது. இது பண்புசார் ஆய்வாக

வடிவமைக்கப்படுகின்றது. ஆய்வில் தரவு சேகரிப்பு கருவிகளாக இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைவாக சீக்கியரின் விடுதலைப் போராட்டம் தொடர்பிலான நூல்கள், கட்டுரைத் தொகுப்புகள், வெளியிடப்பட்ட, வெளியிடப்படாத தேர்ந்தெடுக்கப்பட்ட நம்பகரமான தரவுகள் கொண்ட ஆய்வறிக்கைகள், தேசியம் மற்றும் சர்வதேச ரீதியிலான இணையத்தளங்கள் மூலமான கட்டுரைகள் போன்றவற்றை மையப்படுத்தியுள்ளது.

**கலந்துரையாடல்களும் முக்கிய முடிவுகளும்**

சீக்கியர்களுடைய காலிஸ்தான் விடுதலைப் போராட்டம் பஞ்சாப் மாநிலத்தில் அழிக்கப்பட்டதன் பின்னர் புலம்பெயர் தேசியம் வாயிலாக தம் இலக்கு நோக்கிய நகர்வினை சீக்கியர்கள் மேற்கொள்கின்றனர். தேசியமானது நிலையான வரையறைக்குள் மட்டுப்படுத்தப்படுவதில்லை. தேசியம் காலத்திற்கேற்ப தொடர்ச்சியாக பல்வேறு பரிமாணங்களில் வளர்ச்சியடையக் கூடியதாகும். அவ் வளர்ச்சி பரிமாணங்களில் ஒன்றே புலம்பெயர் தேசியவாதமாகும். சீக்கியர்கள் பிரித்தானிய காலனித்துவகாலம் தொடக்கம் இன்று வரை கனடா, பிரித்தானியா, அமெரிக்கா, ஆவுஸ்ரேலியா, பெல்ஜியம், ஸ்பெயின், நெதர்லாந்து, ஆபிரிக்க நாடுகள், இந்தோனேசியா மற்றும் சுமாத்திரா தீவுகள் எனப் பரவலடைந்து காணப்படுகின்றனர். இவர்களாலே சீக்கிய புலம்பெயர் தேசியவாதம் கட்டமைக்கப்படுகின்றது. ஆனால் கனடாவில் சீக்கியர் பெறும் தேசியத் தன்மை முதன்மை ஏனைய நாடுகளில் அமைந்துள்ளதா என்பது கேள்விக்குரியதே.

சீக்கிய புலம்பெயர் தேசியவாத அமைப்புகள் மேற்கொள்ளுகின்ற செயற்பாடுகளை நோக்குகின்றபோது,

- காலிஸ்தான் உருவாக்கத்திற்கான அதிகாரபூர்வமற்ற வாக்கெடுப்புகளை நடாத்துகின்றனர். இது அவுஸ்ரேலிய சீக்கிய புலம்பெயர் அமைப்புகளால் நடாத்தப்பட்டது.
- நிதி உதவிகளை தாயகத்தில் உள்ளவர்களுக்கு வழங்குதல். குறிப்பாக 1995ல் பஞ்சாப் மாநில முதலமைச்சர் பியாந்த் சிங் (Beant Sing1922-1995) படுகொலை செய்யப்பட்டதில் காலிஸ்தான் கொமாண்டே படையணிக்கு(Khalistan Commando Force)அமெரிக்க புலம்பெயர் அமைப்பு நிதி உதவி வழங்கியதாக குற்றச்சாட்டுக்கள் உண்டு.
- சமூகவலைத்தளங்கள் மூலமாக சமூக அணிதிரட்டலை மேற்கொள்கின்றனர். குறிப்பாக, www.khalistan.com மற்றும் www.khalistanaffairs.org போன்ற வலைத்தளங்கள் 1987 ஆம் ஆண்டு வாஷிங்டனில் கலாநிதி அவுலக்சிங்கினால் (Dr.Gurmit Sing Aulakh 1938-2017) சுயாதீன காலிஸ்தானை உருவாக்கும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட வெற்றிகரமான வலையமைப்பு ஆகும்.
- வன்முறைசார் போராட்டங்களில் அதிகளவு ஈடுபடுபவர்களாக புலம்பெயர் சீக்கியர்கள் காணப்படுகின்றனர். குறிப்பாக 1984ல் இந்தியாவில் இடம்பெற்ற வன்முறைத் தாக்குதல்களுக்கு 1985ல் அட்லாண்டிக் பெருங்கடலில் Air India Flight–182ல் குண்டு வெடிப்பினை கனடாவின் புலம்பெயர் சீக்கிய சமூகம் மேற்கொண்டது. மேலும் காலிஸ்தானுக்கு அழைப்பு விடுத்த தலைவர் அமிர்த்பால்சிங் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இலண்டனில் உயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் இந்தியக் கொடியை இழுத்து வன்முறைச் சம்பவங்களில் சீக்கியர்கள் ஈடுபட்டமை குறிப்பிடதக்கது.

இத்தகைய நாடு கடந்த வலையமைப்புகளின் மூலமாக சீக்கியரின் புலம்பெயர் தேசியவாத செயற்பாடுகள் தாம் அரசியல்மயப்படுத்தப்பட்ட இனச் சமூகம் என்பதைக் காட்ட மட்டுமே முற்படுவதாக உள்ளது. பஞ்சாப் வாழ் சீக்கியர்கள் இந்திய தேசத்திற்குள் தம்மை ஒன்றிணைத்த அரசியலில் ஈடுபடுகின்ற போக்கினையே வெளிப்படுத்துகின்றனர். எனவே தாயக மக்களின் நிலைப்பாட்டினை கவனத்தில் கொள்ளாமல் சீக்கிய புலம்பெயர் தேசியவாத அமைப்புக்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் இந்தியாவில் சீக்கியர்களை பிரிவினைவாதிகளாகவும் வன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களாகவே விம்பப்படுத்துகிறது. இதன் மூலம் காலிஸ்தான் தனிநாட்டு கோரிக்கை சவாலிற்கு உட்படுத்தப்படுகிறது.

கனடாவில் உள்ள சீக்கியர்களின் புலம்பெயர் தேசியவாத அமைப்பு ஏனைய சீக்கிய புலம்பெயர் அமைப்புகளினை விட அரசியல் ரீதியாகவும் சனத்தொகையிலும் வலுவானதாகும். 2021ம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பின் படி சுமார் 771790 பேராகவும் காணப்பட்டதோடு கனடாவின் 42வது பாராளுமன்றத்தில் 17ற்கு அதிகமான பிரதிநிதித்துவத்தையும் பெற்றனர். இத்தகைய அரசியல் சார் நிலைப்பாடுகள் ஒரு சிறிய காலப்பகுதியில் மாத்திரமே கனடா–இந்திய வெளியுறவுக் கொள்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலை காலிஸ்தான் விடுதலைப் போராட்டத்திற்கான நிலைப்பாட்டினை பெற்றுகொடுக்க வாய்ப்பானதாக அமையுமா என்பது சந்தேகத்திற்குரியது. குறிப்பாக 2023ம் ஆண்டு ஹர்திக் சிங் நிஜ்ஜார் (Hardeep Singh Nijjar1977-2023) என்னும் சீக்கியப் பிரிவினைவாத இனக்குழுவின் தலைவர் கொலை செய்யப்பட்ட விவகாரத்தில் இந்தியாவுடனான வெளியுறவுக் கொள்கையில் கனடா பல்வேறுபட்ட மாற்றங்களை ஏற்படுத்தியது. குறித்த காலப்பகுதியின் பின்னர் அந்நிலை சுமூகமானதாகவே மாற்றமடைந்தது. இன்றைய உலகமயமாக்கல், நவதாராண்மைவாத அரசுகளின் சந்தை முக்கியத்துவம் என்பன பிரதான வகிபங்கினைப் பெறுகின்றது. மிகப் பெரிய சந்தையினை கொண்ட இந்தியாவின் நலன்களிற்கு எதிராக சீக்கியர் போன்ற சிறுபான்மை இன குழுவிற்கு ஆதரவாக எந்தவொரு அரசுகளும் செயற்படுவது அவ் அரசுகளின் பொருளாதார வர்த்தக நலன்களைப் பாதிக்க கூடியதாகும். சர்வதேச ஆதரவு இன்றி சீக்கிய தனிநாட்டுக் கோரிக்கை சாத்தியப்பாடற்றதாக இப்பின்னணியில் காணப்படுகின்றது.

யூதப் புலம்பெயர் தேசியவாதம் தாயகத்தின் எல்லைக்கு அப்பால் நின்று தமக்கான தனிநாட்டை உருவாக்கியது. உலக ஒழுங்கினைத் தீர்மானிக்கும் ஏகாதிபத்திய அரசுகளின் நலன்களிலும், அரசுகளின் கொள்கை தீர்மான செயற்பாடுகளிலும் சியோனிஸ்ட்களாக யூதர்கள் புலம்பெயர் தளத்தில் செய்யப்பட்டனர். பனிப்போர் காலப்பகுதி, மேற்காசியாவின் புவிசார் அமைவிடம் என்பனவும் இஸ்ரேல் உருவாக்கத்திற்கு பங்களிப்பு செய்தன. யூத தேசியவாதத்தை முன்மாதிரியான அணுகுமுறையாக கொள்ளும் சீக்கியர்கள் அறிவியல் ரீதியிலும், நிதி மூலதன ஒத்துழைப்பிலும் அரசியலிலும் தம்மை வளர்த்துக் கொள்ளவும் அரசுகளின் கொள்கை செயல்பாடுகளில் தமது வகிபங்கினை நிலைநிறுத்துவதிலும் வெற்றிகரமாக பயணிக்கவேண்டியுள்ளது. பனிப்போர் காலப்பகுதியைப் போன்றல்லாமல் இன்றைய 21ஆம் நூற்றாண்டு காலிஸ்தான் விடுதலைப் போராட்டத்தை மேலும் சிக்கலுக்குள் தள்ளியுள்ளது.

காலிஸ்தான் விடுதலைப் போராட்டத்தினை நிலப் பண்பாட்டு தேசியத்தின் ஊடாக விவாதிக்கின்ற போது, வடக்கு, கிழக்கு, மேற்கு என மூன்று பகுதிகளில் இந்தியாவின் எல்லைகளால் சூழப்பட்டு

காணப்பகிறது. பங்களாதேஷின் நிலைத்திருப்பு சாத்தியப்படும் போது சீக்கியர்களின் காலிஸ்தான் கோரிக்கை வெற்றியடையுமா என நோக்கினால் பஞ்சாப் மாநிலம் நான்குபக்கமும் நிலத்தால் சூழப்பட்டபகுதி. இதில் சீக்கியர்கள் அரைவாசிக்கும் சற்று அதிகமாகவே காணப்படுகின்றன. பங்களாதேஷ் உருவாக்கத்தில் பாகிஸ்தானைக் கையாளும் இராஜதந்திர பின்னணி இந்தியாவிடம் காணப்பட்டது. அத்தகைய இராஜந்திர ரீதியான முக்கியத்துவத்தை சீக்கியர்கள் பெற்றிருக்கவில்லை. நிலப்பண்பாட்டுத் தேசியம் பலவீனமாகக் காணப்படும் சீக்கியர்களின் தாயகமான பஞ்சாப் நிலத்தில் புலம்பெயர் தேசியவாதத்தினால் காலிஸ்தான் தனிநாட்டுக் கோரிக்கையினைக் கட்டியெழுப்புவது கடினமானதாகும்.

இவ் விவாதங்களின் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட முக்கிய முடிவுகளாக, புலம்பெயர் தேசியவாத அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் காலிஸ்தானை உருவாக்கும் இலக்கு நோக்கியதாக காணப்படவில்லை. கனடாவின் சீக்கிய புலம்பெயர் தேசியவாத அமைப்புக்களின் அழுத்தம் இந்திய–கனேடிய வெளியுறவுக் கொள்கையில் குறிப்பிட்ட காலப் பகுதியில் மாத்திரமே செல்வாக்கு செலுத்தியதொன்றாக காணப்பட்டது. கனடாவும்–இந்தியாவும் பரஸ்பர ஏகாதிபத்திய கொள்கைகளுக்காக இணங்கிச் செயல்படும் போக்கினை முதன்மைப்படுத்த ஆரம்பித்துவிட்டன. கனடாவின் வெளியுறவுக்கொள்கையினால் இந்தியாவிற்கு அழுத்தம் கொடுக்கும் நிலை தோன்றவில்லை. புலம்பெயர் தேசியவாத அமைப்புகள் சர்வதேச அரசுகள் மூலம் இந்திய நலனுக்கு எதிராக காலிஸ்தானை அங்கீகரிக்கும் நிலைப்பாட்டை ஏற்கவில்லை. யூதர்களைப் போன்று அரசியல் பொருளாதார அறிவியல் ரீதியாக பலமான புலம்பெயர் தேசியவாதத்தை சீக்கியர்கள் கட்டமைக்கவில்லை. நிலப் பண்பாட்டு தேசியம் சீக்கியர்களுடைய நிலப்பகுதியின் எல்லைகள் புவியியல் ரீதியாக முக்கியத்துவத்தை வழங்கவில்லை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**முடிவுரை**

தென்னாசிய பிராந்தியங்களில் தேசிய விடுதலைப் போராட்டங்கள் கற்பனாவாத தேசியங்களாக அதிகம் கட்டமைக்கப்பட்டுள்ள போக்கு காணப்படுகின்றது. சீக்கியர்களுடைய புலம்பெயர் தேசியவாதமும் இத்தன்மை பொருந்தியதாகும். சார்ள்ஸ் டார்வினுடைய தக்கனப் பிழைத்தல் கோட்பாட்டிற்கு அமைய தேசிய இனக் குழுக்கள் தங்களுடைய இருப்பினைப் பேண வேண்டிய தேவை எழுந்துள்ளது. பஞ்சாபில் காணப்படுகின்ற இந்து மதத்தினரோடு இணைந்து இந்தியாவினுடைய சமஸ்டியினை வலுப்படுத்தி தமக்கான அதிகாரத்தின் மூலம் தீர்மானங்கள் மேற்கொள்ளும் அரசியல் வகிபங்கு சுதேச சீக்கியர்களிடம் காணப்படுகிறது. எனவே பஞ்சாப் வாழ் சீக்கியரின் மனோநிலையை கருத்திற் கொள்ளாமல், எல்லை கடந்த சீக்கிய புலம்பெயர் தேசியவாத அமைப்புக்கள் தம்மை அதன் புவிசார் அரசியல், பிராந்திய சர்வதேச அரசியல் மற்றும் ஏகாதிபத்தியங்களின் சமரச அரசியல் என்பனவற்றின் ஊடாக சீக்கிய விடுதலைக்கான வாய்ப்புக்களை பலவீனப்படுத்தியுள்ளது. சாத்தியமற்ற செய்முறை ஒன்றுக்கான போராட்டத்தை நகர்த்துவதாகவே சீக்கியரது விடுதலைப் போராட்டம் காணப்படுகிறது.

**உசாத்துணைகள்**

Anuppiriya, S. (2010). Demonstrating identities: Citizenship, multiculturalism and Canadian Tamil identities [Doctoral dissertation, Library and Archives Canada]. https://central.bac-lac.gc.ca.

Davis Raganda, P., & Syabena, M. (2022, October). Self-concept of Sikh people in maintaining Sikhism identity in a multi-religious community. *Journal Sociological Dialektika.* https://www.researchgate.net

Hindu American Foundation. (n.d.). *The Khalistan movement: History and resurgence in Western diaspora.* https://www.hinduamerican.org/Khalistan

Mehmi, V. (2022, December 16). *Raj Karega Khalsa! – The evolution of the Sikh identity.* University of San Francisco.

Sarwar, I., Shamshad, M., & Arshad, F. (2022). Crisis of identity in the 20th century: The case of Sikhs in India. *Perennial Journal.* https://pjh.wum.edu.pk/index.puP

Shaded, K. (2020, January 18). *Sikh diaspora nationalism in Canada.* Wiley Online Library. https://onlinelibrary.wiley.com

Singh, G. (2023, April 11). *Making sense of Sikh nationalism.* Taylor & Francis Online. https://www.tandfonline.com

Suhashini, G. T. (2001, May). *Contesting Khalistan: The Sikh diaspora and the politics of separatism* [Doctoral dissertation, The University of Texas at Austin].